


மனைப்பிரிவு வரைபடம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தென்காசி மாவட்டம்

மலையிட பாதுகாப்பு குழும பகுதி (HACA)
(திட்டமில்லா பகுதி)
செங்கோட்டை வட்டம்,
சுமைதீர்ந்தபுரம் ஊராட்சி,
வல்லம் கிராமம்,

புல எண்: 78/5B, 6, 7A –ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்

அளவு: 1 : 400 இணையதள விண்ணப்பம் எண் : ZING28OT/TCP/2025

குறிப்பு:

மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு = 4650.00ச.மீ (1.15 ஏக்கர்)
உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பளவு = 949.06ச.மீ
= 3700.94ச.மீ
கோரிய மனைகள் – 23
ஒதுக்கிய மனைகள் – 23
மனைப்பிரிவு இடத்தின் எல்கை
நிலையிலுள்ள சாலை
மனைப்பிரிவு சாலை

ஒதுக்கீடுகள் :–
பொது ஒதுக்கீடுகள் :–

1. TNCDBR விதி 47 (6) –ன்படி 10.00% OSR–பரப்புக்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை தொகை ரூ.11,98,330.00 –யை உரிய அரசு கணக்கில் நாள் 29.07.2025 –ல் செலுத்தப்பட்டுள்ளது.
2. சுமைதீர்ந்தபுரம் ஊராட்சிக்கு தான பத்திர ஆவண எண் 1506/2025,நாள் 18.07.2025 மூலம் அரசுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகள்
   (i) உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடக்கு பரப்பு – 949.06ச.மீ
   (ii) (A) உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது உபயோக (PUBLIC PURPOSE) ஒதுக்கீடு – 18.83 ச.மீ (0.51 %)
   (B) உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது உபயோக (TANGEDCO) ஒதுக்கீடு – 18.83 ச.மீ (0.51%)

கட்டட வரம்பு – 9.0 மீ அகல சாலைக்கு 1.50மீ
மூலை முடக்கு – 7.20மீ ,9.0மீ மற்றும் 10.0மீ அகல சாலைக்கு 1.50மீ x 1.50மீ

நிபந்தனைகள்:

1. அரசாணை நிலை எண் : 71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள்:16.08.2003–ன் படி நில உரிமம் குறித்து தலைவர், சுமைதீர்ந்தபுரம் ஊராட்சி அவர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும். மேலும் சாலைகள் மூலை முடக்கு மற்றும் பொது உபயோகம் ஒதுக்கீடு பகுதியினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும் முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், நிலஆர்ஜிதம் செய்து தரக்கோரி தென்காசி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை எனவும், தலைவர், சுமைதீர்ந்தபுரம் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து சமர்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.
4. அரசாணை நிலை எண் : 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 19–12–2020–ன் படி தலைவர், சுமைதீர்ந்தபுரம் ஊராட்சி அவர்கள் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளபட வேண்டும்.
5. மனைப்பிரிவு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ ஓடை, கால்வாய் போன்ற பொது நீர்வழிப்பாதைகள் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை எனவும், அரசு புறம்போக்கு நிலங்களில் மேற்படி மனைப்பிரிவு அமையவில்லை என்பதையும் தலைவர், சுமைதீர்ந்தபுரம் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' -என்ற அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.
7. இம்மனைபிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் தடுப்பு சுவர் எழுப்பக் கூடாது.

ம.வ/ தெமாநஊஅ எண் – SWP/43/2025

அளவர் / உதவி வரைவாளர்

வரைவாளர் நிலை – III

மேற்பார்வையாளர்

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தென்காசி மாவட்டம்.

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Tenkasi
Date:2025.07.31 12:13:03

Signature Not Verified
Signed by Village Panchayat President
Location:Tenkasi
Date:2025.09.04 11:58:22